NP – 043

I Semester B.B.A./B.H.M./B.C.A. Examination, May 2022
(NEP-2021-22 and Onwards)
TAMIL LANGUAGE (Paper – I) (Part – I)

Time : 2½ Hours  Max. Marks : 60

SECTION – A

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5×1=5)

1) உயிர்மெய் எழுத்துகள் மொத்தம்
   1) 30  2) 216  3) 246  4) 247

2) பட்டினப்பாலையின் ஆசிரியர்
   1) பரணர்
   2) கபிலர்
   3) கடியலூர் உருத்திரங்கண்ணனார்
   4) சேக்கிழார்

3) சார்பெழுத்துகள் இத்தனை வகைப்படும்
   1) பத்து  2) எட்டு
   3) மூன்று  4) நான்கு

4) 'உலகம் சுற்றும் தமிழன்' -இந்நூலின் ஆசிரியர்
   1) குமரி அனந்தன்  2) சுப்ரபாரதிமணியன்
   3) வைரமுத்து  4) ஏ.கே. செட்டியார்

5) மதுரைக் கூடலூர் கிழார் எழுதிய நூல்
   1) முதுமொழிக்காஞ்சி  2) மதுரைக்காஞ்சி
   3) சிலப்பதிகாரம்  4) மணிமேகலை

II. எவையேனும் ஐந்திற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. (5×3=15)

1) 'நெய் பெய்தீம் பால் பெய்து இனிது வளர்ப்ப
   நும்மினும் சிறந்தது;நுவ்வை ஆகும்' என்று
2) அறிவுசோர்வு உடைமையின் பிறிதுசோர்வும் அறிப
3) நின்ற சொல்லர்; நீடுதோறு இனியர்,
   என்றும் என்தோள் பிரிபு அறியலரே
4) ஈரம் உடைமை ஈகையின் அறிப

P.T.O.

5) கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை
பொன்கால் புதல்வர் புரவிஇன்று உருட்டும்

6) 'ஜப்பானில் எத்தனையோ வீரர்கள் பிறந்திருக்கி
றார்கள். ஆனால் காந்தியடிகள் போன்ற சிறந்த
மனிதர்கள் பிறந்ததே இல்லை' என்றான்

7) 'முன்பின் தெரியாத ஒரு நாட்டிலே, நிறவேற்றுமை
நிறைந்த லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலே எனது நிலை
பரிதாபமாய் இருந்தது'

8) 'நான் பேசுகிறேன். நீங்கள் ஒலியை வேண்டு
மானால் பதிவு செய்யுங்கள். ஆனால் தயது செய்து
எனது படத்தை மட்டும் எடுக்காதீர்கள்'

## SECTION – B

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக. **(5×4=20)**

1) போலியின் வகைகளைச் சான்றுடன் கூறுக.
2) ஔகாரக் குறுக்கம் என்றால் என்ன ? சான்று தருக.
3) இன்னிசை அளபெடை என்றால் என்ன ? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
4) வினா எழுத்துக்களைச் சான்றுடன் கூறுக.
5) வெள்ளி வீதியார், சிறுவெள்ளாங்குருகை அழைத்துக் கூறுவன யாவை ?
6) பட்டினப்பாலை கூறும் காவிரி ஆற்றின் சிறப்பினை எழுதுக.
7) ஜப்பானியர்கள், காந்தியடிகளை எவ்வாறு புகழ்ந்து கூறினர் ?
8) 'ஹவாய்த் தீவுகள்' குறிப்பு வரைக.

## SECTION – C

IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. **(4×5=20)**

1) 'பழியாபத்தில்' முதுமொழிக் காஞ்சி கூறும் கருத்துகள் யாவை ?
2) வினைமுற்றிய தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறியவற்றை நன்றிணை எவ்வாறு எடுத்துரைக்கின்றது ?
3) பட்டினப்பாலை கூறும் திருமாவளவனின் வெற்றிச் சிறப்பினை எழுதுக.
4) 'ரோமாரோலான்' பற்றிய செய்திகளை எழுதுக.
5) 'உலகில் அழகிய பாரிஸ்' குறித்துச் சுருக்கி வரைக.
6) கவிஞர் நேர்க்குச்சி -குறிப்பு வரைக.

---